
# இஸ்லாத்திலே ஸியாரத்து



மௌலவி அல்ஹாஜ் ஏ. எல். முஹாஜிரீன் ( நத்வி )

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு ஆரம்பிக்கின்றேன்.

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தென்னும் கருணையும், ஸலாம் என்னும் ஈடேற்றமும் அகிலத்துக்கு அருட்கொடையாக வந்துதித்த அருமைத் தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மீதும் அன்னாரின் கிளையார்கள், தோழர்கள், தொடர்ந்தவர்கள், இறைநேசர்கள், ஸாலிஹீன்கள், உண்மையான மு.ஃ. மீன்கள், முஸ்லிம்கள் அனைவோர் மீதும் உண்டாவதாக!

அன்பின் முஸ்லிம் சகோதரர்களே! அல்லாஹ்வின் ஏவலை ஏற்று விலக்கலைத் தவிர்ந்து நடப்பதும், அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை நெறியை அனுஷ்டித்து நடப்பதும் முஸ்லிம்கள் மீது கடமையாகும். அன்னாரின் வாழ்க்கை முறையில் நின்றுமுள்ளது தான் “ஸியாரத்துல் குபூர்” என்னும் மரணித்தவர்களின் கப்ருகளை ஸியாரத்து செய்வதும், ஸலாம் சொல்வதுமாகும். இது சம்பந்தப்பட்ட ஏராளமான நபிமொழிகளை நாம் ஹதீஸ் கிரந்தங்களில் காணக்கூடியதாய் உள்ளது. இருந்தும் தற்காலத்தில் சிலர் இக்கருத்தை நிராகரித்து ஸியாரத்து செய்வது கூடாது அது பித்அத்து, ஸிர்க்கு என்பதுடன் ஸியாரத்து செய்பவர்களை கபுறு வணங்கிகளென்றும் சொல்லித்திரிவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எனவேதான் ஸியாரத்து செய்வது இஸ்லாத்தில் உள்ளதுதான் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொன்மொழிகளிலிருந்தும், இமாம்களின் தீர்ப்புகளிலிருந்தும் சிலதைத் தெரிவு செய்து அதை ஒன்றுசேர்த்து “இஸ்லாத்திலே ஸியாரத்து” என்ற நாமத்துடன் இதை வெளியாக்க முன்வந்தேன். எல்லாம் வல்ல அல்லாஹ் இதை எழுதிய எனக்கும் இதைப்பார்த்து நேர்வழி பெறும் மக்களுக்கும், மற்றும் மு.ஃ.மீன்கள், முஸ்லீம்களுக்கும் பிழை பொறுத்து, நாட்டதேட்டங்களை நிறைவேற்றி,

மேற்கூறப்பட்ட வசனத்திற்கு விரிவுரை எழுதும் இமாம் பஹ்ருர்ராஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "ஒரு மையத்து நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டால் அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அக்கபுறுக்கருகாமையில் நின்று அம்மையித்திற்காகப் பிரார்த்தனை புரிவார்கள்" எனக் கூறியுள்ளார்கள்.

| | |
|---|---|
| தப்ஸீர் பஹ்ருர்ராஸி | பக்:153 - பாகம்:16 |
| ரூஹுல் பயான | பக்:478 - பாகம்:3 |
| முஹ்மமதுர்ரஸுலுல்லாஹ் | பக்:343 |

"கப்றுகளை ஸியாரத்து செய்வதை உங்களுக்கு நான் தடுத்திருந்தேன். இப்போது அதை நீங்கள் ஸியாரத்து செய்யுங்கள். அப்படி ஸியாரத்து செய்வது இவ்வுலகில் உங்களைத் துறவியாக்கி வைக்கும்; மறுமையை ஞாபகப்படுத்தும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு
ஆதாரம் இப்னுமாஜா மிஸ்காத் பக்கம்:154

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அன்னை ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டில் தங்கும் நாட்களின் இரவுகாலங்களின் பிற்பகுதியில் ஜன்னத்துல் பகீஃ எனும் மையவாடிக்குச் சென்று அக்கபுறாளிகளைப் பார்த்து ஸலாம் கூறி "உங்களுக்கு வாக்களிக்கப்பட்டது வந்து விட்டது. நாங்களும் இன்ஷா அல்லாஹ் உங்களுடன் வந்து சேர்வோம்" எனக் கூறி, "நாயனே பகீஉல் ஹர்கத் உடையவர்களுக்கு பிழை பொறுப்பாயாக" எனக் கூறுவார்களென ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அறிவிக்கின்றார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் பக்கம்: 313 - பாகம்:
மிஸ்காத பக்கம்: 154

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவின்





மையவாடிக்கருகாமையில் நடந்து சென்று அக்கபுறுடையவர்களை முன்னோக்கி ஸலாம் சொல்லி " அல்லாஹ் உங்களுக்கும் எங்களுக்கும் பிழை பொறுப்பானாக. நீங்கள் எங்களை முந்தி விட்டீர்கள்.

நாம் உங்களுக்குப் பின்னால் வருவோம்" எனக் கூறுவார்கள்.

அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு
ஆதாரம் திர்மிதி

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தனது தாயின் கப்றை ஸியாரத்து செய்தார்கள். பின்னர் " நான் எனது தாயின் கப்றை ஸியாரத்து செய்வதற்கு எனது ரப்பிடம் அனுமதி கோரினேன். எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. எனவே நீங்கள் கப்றுகளை ஸியாரத்து செய்யுங்கள். அவ்வாறு ஸியாரத்து செய்வது உங்களுக்கு மரணத்தை ஞாபகமூட்டும்." என்று கூறினார்கள்.

ஆதாரம் முஸ்லிம், மிஷ்காத். பக்கம்:154
அறிவிப்பவர் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு

அல்லாஹ் குர்ஆனின் சூரா ரஃத் 23,24ம் வசனங்களில் "மலக்குகள் சுவர்க்கத்தின் எல்லா வாசல்களினூடாகவும் புகுந்து சுவர்க்க வாசிகளைப் பார்த்து, ஸலாம் கூறி, நீங்கள் உலகத்தின் கஷ்டங்களுக்கு பொறுமை சாதித்ததன் காரணத்தால் இந்த நன்மை உங்களுக்குக் கிடைத்துள்ளது. எனவே ஆகிரத்தின் வீடே நல்லதாகி விட்டது" எனக் கூறுகின்றான்.

மேற்கூறப்பட்ட வசனத்திற்கு வியாக்கியானம் எழுதும் இமாம் பக்ருர்ராஸி அவர்கள் "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் உஹது மலையடிவார சுஹதாக்களின் கப்றுகளை ஸியாரத்து செய்து ஸலாம் கூறி மேற்கூறப்பட்ட ஆயத்தையும் ஓதுவார்கள். இவ்வாறே அவர்களுக்குப் பின் கலீபாக்களும் செய்வார்கள்" எனக் கூறியுள்ளார்கள்.

தப்ஸீருர் ராஸி பக்கம்:45 - பாகம்:19

இப்னு கதீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவ்வாறே அபூபக்கர், உமர், உஸ்மான் ரலியல்லாஹு" அன்ஹு"ம் நடந்து கொண்டனர் எனக் கூறுகிறார்கள்.

தப்ஸீர் இப்னு கதீர் பக்கம்:511 - பாகம்:2

நாயகம் ஸல்லல்லாஹு" அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் உஹது ஷு"ஹதாக்களின் கப்றுகளுக்கு சென்று உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக. நீங்கள் உலகத்தில் பொறுமை கொண்ட காரணத்தால் இந்த நன்மை உங்களுக்குக் கிடைத்துள்ளது. எனவே மறுமையின் வீடே நல்லதாகிவிட்டதெனக் கூறுவார்கள் என அப்துர்ரஸ்ஸாக் ரலியல்லஹு" அன்ஹு" கூறியுள்ளார்கள்.

முஸன்னப் அப்துர்ரஸ்ஸாக் பக்கம்574 பாகம்3

அருமை நபி ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லமவர்கள் எட்டு வருடங்களுக்குப் பின் உஹதில் கொள்ளப்பட்டவர்களுக்காக மரணித்தவர்களுக்கும், உயிருடன் உள்ளவர்களுக்கும் பிரியாவிடை சொல்பவர்கள் போன்று துஆச் செய்தார்கள்.

புகாரி - பக்கம்578 - பாகம்2.

யார் எனது கப்றை ஸியாரத்து செய்கிறாரோ அவருக்கு எனது ஷபாஅத்து கட்டாயமாகிவிட்டதென்றும், பிரிதொரு ரிவாயத்தில் எனது ஷபாஅத்து ஆகுமாகிவிட்டதென்றும் அருமை நபி ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லமவர்கள் கூறியுள்ளார்கள்.

தாரகுத்னி

யார் ஹஜ் செய்து விட்டு எனது கப்றை ஸியாரத்து செய்கிறாரோ, பிரிதொரு ரிவாயத்தில் எனது மரணத்தின் பின் யார் என்னை ஸியாரத்து செய்கிறாரோ அவர் என்னை உயிருடன் இருக்கும் நிலையில் ஸியாரத்து செய்தவரைப் போன்றாவார் என நபி ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.





இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹி அவர்கள் நபி ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லமவர்களின் கப்றை ஸியாரத்துச் செய்வதற்காக பிரயாணத்தைக் கஷ்டமாக்கிக்கொள்வது கூடாதென இப்னு தைமிய்யாவைத் தொட்டும் திருப்பப்பட்டிருக்கும் வாசகம் மிகவும் அவலட்சணமானது ஏனெனில் ரஸு"லுல்லாஹ்வின் கப்றை ஸியாரத்துச் செய்வது நல்லமல்களில் மிகவும் விசேசமானது: அல்லாஹ்வின் பக்கம் சேர்த்து வைக்கும் நற்கருமங்களில் வழுப்பமானது: அதை ஸியாரத்து செய்வது சந்தேகமின்றி ஏகோபித்த முடிவு எனக் கூறியுள்ளார்கள்.

அஷ்ஷெய்கு இப்னுல் ஹு"மாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் ரசூலுல்லாஹ்வின் கப்றை ஸியாரத்து செய்வது முஸ்தஹப்பு-வாஜிபுக்கு நெருக்கமானது: ஏனெனில் முன்னோர்களில் பல்லாயிரக் கணக்கானோர் அவர்களின் கப்றை ஸியாரத்து செய்வதற்காகப் பிரயாணக்கஷ்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஸியாரத்து செய்வது வலுப்பமான வணக்கம் எனவும் கூறியுள்ளார்கள். அவர்களின் நிய்யத்து பள்ளிவாசலுக்கு செல்வதாகத்தான் இருந்தது: ரசூலுல்லாஹ்வின் ரவ்லாவிற்கல்ல என்பது பிழையானதாகும். எனினும் அவர்கள் ரசூலுல்லாஹ்வின் கப்றை ஸியாரத்து செய்வதென்ற நிய்யத்துடனேயே சென்றுள்ளார்கள்.

பைழுல் பாரி - பக்கம்:433 - பாகம்:2

கதீபுஸ்ஸிர்பீணி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நபி ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லம் அவர்களின் கப்றை ஸியாரத்து செய்வது ஆண்களுக்கும், பெண்களுக்கும் வலுப்பமான வணக்கம் எனக் கூறுவதுடன் இமாம் திம்னஹு"ரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ரசூலுல்லாஹ்வின் கப்றை ஸியாரத்து செய்வது சுன்னத்தென்பதுடன் ஏனைய நபிமார்கள், ஸாலிஹீன்கள், ஷு"ஹதாக்களின் கப்றுகளையும் ஸியாரத் செய்வதையும் சேர்த்து வைத்துள்ளார்களெனக் கூறுகிறார்கள்.

மு.்.னில் முஹ்தாஜ்-பக்கம்:365-பா:1

அல்லாஹ் குர்ஆனில் சூரா ஜாஸியா 23ம் வசனத்தில் "தனது ஆசையைத் தனது நாயனாக எடுத்துக்கொண்டானே அத்தகையவனைப் பார்த்தீர்களா?" எனக் கூறுகிறான். இவ்வசனத்திற்கு இமாம் அஹ்மதுஸ்ஸாவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், "அறிந்து கொள்! ஸாலிஹீன்களையும், நபிமார்களையும் ஸியாரத்து செய்வது அவர்களை வணங்குதல் என்ற இனத்தைச் சார்ந்ததல்ல எனினும் அவ்வாறு ஸியாரத்து செய்வது அவர்கள் பிறருக்கு உதவி செய்வதற்குரிய காரணகர்த்தாக்கள் என்ற இனத்தைச் சேர்ந்ததாகும்" எனக் கூறி, ஸாலிஹீன்களை ஸியாரத்து செய்வதும், அவர்களின் பொருட்டால் அல்லாஹ்விடம் துஆ கேட்பதும் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் நின்றுமுண்டானது. அந்த ஸாலிஹீன்கள் அல்லாஹ்வின் அன்பர்கள்: அல்லாஹ்வுக்கு விருப்பமான அடியார்கள்: அவனின் அடியார்களுக்கு பிரயோசனம் கொடுக்கக் கூடியவர்களே. எனவே ஸாலிஹீன்களை ஸியாரத்து செய்வது ஷிர்க் என்பது ஒருபக்கமிருக்க, அது பாவமென்பது இல்லை. அப்படி ஷிர்க் என்பது மடையர்கள், கெட்ட கொள்கையுடையவர்களின் நம்பிக்கையாகும் எனக் கூறியுள்ளார்கள்.

தப்ஸீர் ஸாவி - பக்கம்:71-பா:4

இன்னும் இறைநேசர்களை ஸியாரத்து செய்வது அல்லாஹ் அல்லாததை வணங்குவதாகும் என வாதாடி ஸியாரத்து செய்யும் முஸ்லிம்களை காபிர்களாக்குவது பகிரங்கமான வழிகேடும், வெளிரங்கமான நஷ்டமுமாகும். விடயம் அவர்கள் வாதாடுவது போன்றல்ல. ஸாலிஹீன்களை ஸியாரத்து செய்வது யாருக்கு முஹப்பத்து இல்லையோ அவருக்கு ஈமான் இல்லை என்ற நபி மொழியின் பிரகாரம் அந்த முஹப்பத்தில் நின்றுமுண்டானதுதான் அவர்களை ஸியாரத்து செய்வது எனவும் கூறியுள்ளார்கள்.

தப்ஸீர் ஸாவி பக்கம்:282-பா:1

ஸாலிஹீன்கள் அல்லாஹ்வின் அன்பர்கள். அவர்கள்





அல்லாஹ்வுக்கு வழிப்படுவதையே தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள். இதனால் அவன் அவர்களைத் தெரிவு செய்து கொண்டான்; அவர்களைப் பொருந்திக் கொண்டான் என்ற நம்பிக்கையுடன் அவர்களை ஒரு மனிதன் யாரை விரும்புகின்றானோ அவனுடன் மறுமையில் இருப்பான் என்ற நபி மொழிக்காக ஸியாரத் செய்வதும், நேசம் பிடிப்பதும், அன்பு வைப்பதும் மறுமையில் வெற்றியைத் தரக்கூடியது என இமாம் அஹ்மது ஸாவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்கள்.

தப்ஸீர் ஸாவி பக்கம்:34-பாகம்:3

மூன்று பள்ளிவாசல்களுக்கன்றி பிரயாணத்தைக் கஷ்டம் உடையதாக ஆக்கிக் கொள்ளப்பட மாட்டாது. இந்த ஹதீதின் அடிப்படையில் மஸ்ஜிதுல் ஹரத்தைத் தவிர ஏஜைய பள்ளிவாசல்களுக்கு தொழுகின்ற நோக்கம் வைத்து பிரயாணத்தைக் கஷ்டமாக்கிக் கொள்வது தொழுகையாளிக்கு அவசியமாக மாட்டாது.

ஆதாரம் முஸ்னத் அஹ்மத்

ஏனெனில் மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந்நபவி, பைத்துல் முகத்தஸ் அல்லாத ஏனைய பள்ளிவாசல்கள் தொழுகை என்ற விடயத்தில் சமமானதேயாகும்.

மூன்று பள்ளிவாசல்களுக்கன்றி தொழுகைக்காக ஏனைய பள்ளிவாசல்களுக்கு செல்வதற்கு கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்ளப்பட மாட்டாது என்ற ஹதீதின்படி நபிமார்கள், வலிமார்களின் கப்றுகளுக்கு ஸியாரத்திற்காக செல்வது தடை என்று சொல்வோரின் கருத்து பிழையானதென இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறுகிறார்கள்.

பத்ஹுல் பாரி பக்கம்:66-பா:3

பைளும் பாரி உடையவர்கள் பிரயாணத்தைக் கஷ்டமாக்கிக் கொள்வது தடை என்பதைப்பற்றி என்னிடத்திலுள்ள பதில்களில் விசேடமானது யாதெனில் அந்த நபி மொழியாகிறது கப்றுகளை ஸியாரத் செய்கின்ற விடயத்தில் வந்ததல்ல. முஸ்னத் அஹ்மதில் மூன்று பள்ளிவாசல்களுக்கன்றி ஏனைய பள்ளிவாசல்களுக்கு தொழுவதற்காக

நிய்யத்து வைத்து பிரயாணத்தைக் கஷ்டமாக்கிக் கொள்ள மாட்டாது என்று வந்திருப்பதால் அந்த ஹதீதிற்கும், கப்றுகளை ஸியாரத்து செய்கின்ற விடத்திற்குமிடையில் எவ்வித தொடர்ப்புமில்லை அந்த நபி மொழி பள்ளிவாசல்களுடைய விடயத்தில் வந்திருப்பதால் ஸியாரத்துடைய விடயத்தில் அதை சேர்ப்பது உண்மையல்ல எனக் கூறுகிறார்கள்

பைளுல் பாரி பக்கம்:433-பாகம்:3

ஹஸ்ரத் சுஹைப் அலைஹிஸ்ஸலாமவர்களின் கப்று ஸாம் தேசத்தின் ஓரத்தில் ஹதீப் என்ற சிற்றூரில் இருக்கின்றது. அவ்வூர் மக்கள் மத்தியில் அது அறியப்பட்ட பிரபல்யமான கப்றாக இருக்கின்றது. அதன் மீது கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது. அக்கபுறை ஸியாரத்து செய்வதற்காக அதைக்கொண்டு பரக்கத் பெறுவதற்காகவும் தூரமான இடங்களிலிருந்து மக்கள் அதை நாடி வருகின்றார்களென அன்ஸாப் என்ற கிரந்தத்தில் இமாம் ஸம்ஆனி ரஹ்மதுல்லாஹி அலைஹி எழுதியிருப்பதாக இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தஹ்தீபுல் அஸ்மா:.வள்ளுஹா என்ற கிரந்தத்தில் பக்கம் 246: பாகம் 1ல் குறிப்பிட்டுள்ளார்கள்.

யார் தனது தாய், தந்தையரின் கப்றுகளை அல்லது அவர்களில் ஒருவரின் கப்றை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஸியாரத்து செய்கின்றானோ அவனுக்கு பிழை பொறுக்கப்படும். மேலும் நன்றியுடையவனெனவும் எழுதப்படுமென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியுள்ளார்கள்.

அன்பர்களே! இதுவரையும் பொதுவாகவே ஸியாரத் செய்வதை இயன்ற வரையில் கூறி வந்தோம். இப்பொழுது பெண்கள் ஸியாரத் செய்யலாமா என்பதைக் கவனிப்போம்.

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள், "அல்லாஹ்வின் ரசூலே! நான் கப்றுகளை ஸியாரத் செய்யும் போது என்ன சொல்லிக் கொள்ளவேண்டும்? எனக் கேட்டபொழுது, மு:. மீன்கள், முஸ்லிம்களே உங்களுக்கு சாந்தி உண்டாவதாகவும்.





எங்களில் முந்தியோர், பிந்தியோர்களுக்கு அல்லாஹ் கிருபை செய்வானாகவும். அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களுடன் வந்து சேர்வோம் எனக் கற்றுத் தந்தார்கள்" என அறிவிக்கின்றார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம்

அதிகமதிகம் கப்றுகளை ஸியாரத்து செய்யும் பெண்களை அல்லாஹ் சபிப்பானாக என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிரார்த்தனை புரிந்துள்ளார்கள்.

அதிகமதிகம் என்று சொல்லப்பட்டிருக்கும் பதத்திலிருந்து நாம் தெளிவு படுத்திக் கொள்ளவேண்டியது என்னவென்றால் பல நாட்களுக்கொரு தடவை செய்யலாம் என்பதே. எனவே பெண்களும் பல நாட்களுக்கொரு தடவை ஸியாரத் செய்வதில் எந்தத் தவறும் இல்லை.

இன்னும் பலர், மேற்கூறப்பட்ட நபிமொழி ஸியாரத்து செய்வதற்கு அனுமதி கொடுக்கமுன் சொல்லப்பட்ட பொன்மொழியாகும். அனுமதி கொடுத்த பின் அதற்குள் பெண்களும் சேர்க்கப்பட்டுள்ளார்கள் எனக் கூறுகின்றனர்.

இன்னும் சிலர், பெண்களுக்கு பொறுமை குறைந்திருப்பதாலும், அதிகம் திடுக்கப்படுவதாலும் அவர்களுக்கு ஸியாரத் செய்வதை தடுக்கப்பட்டுள்ளது எனக் கூறுகின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், கப்றுக்கு அருகாமையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்து, "அல்லாஹ்வைப் பயந்து பொறுமையாக இரு" என்று சொன்னபோது அவளோ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தெரியாத காரணத்தால், "எனக்கேட்பட்டிருக்கும் துன்பத்தைப் போன்று உங்களுக்கு ஏற்படவில்லை. என்னை விட்டு தூரச் செல்லுங்கள்" எனச் சொல்லிவிட்டு, பின்னர் அவர்கள் நபி

என்பதை அறிந்து மன்னிப்புக் கேட்ட சம்பவம் புகாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ளது. அதில் அப்பெண்ணுக்கு பொறுமையைக் கொண்டுதான் ஏவியுள்ளார்கள். ஸியாரத்தை தடுக்கவில்லை என்ற காரணத்தால் பெண்களும் ஸியாரத் செய்யலாம் என சில இமாம்கள் கூறியுள்ளனர்.

அன்னை ஆயிஷா ரலியல்லஹு" அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள் நான் முகத்தை திறந்த வண்ணம் எனது தந்தையும், கணவரும் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் வீட்டினுள் அவர்கள் எனது கணவரும், தந்தையும் என்று சொல்லிக்கொண்டு நுழைவேன். ஹஸ்ரத் உமர் ரலியல்லாஹு" அங்கு அடக்கம் செய்யப்பட்டதும் அவர்களுக்கு வெட்கப்பட்டதற்காக முகத்தை மூடிக்கொண்டு நுழைவேன் என்பதாக. முஸ்னத் அஹ்மத் மிஷ்காத் பக்கம்157 1

பாதிமா நாயகி ரலியல்லாஹு" அன்ஹா அவர்கள் ஒவ்வெரு வெள்ளிக்கிழமையிலும் ஹஸ்ரத் ஹம்ஸா ரலியல்லாஹு" அன்ஹு" அவர்களின் அடக்கஸ்தலத்தை ஸியாரத்து செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்.

முஸன்னிபு அப்துர்ரஸ்ஸாக் பக்கம்572 பாகம்3

ஆயிஷா ரலியல்லாஹு" அன்ஹா அவர்கள் தனது சகோதரர் அப்துர்ரஹ்மானுடைய கப்றை ஸியாரத்து செய்ததை நான் கண்டேனென இப்னு அபூமுலைகா அறிவிக்கின்றார்கள்.

முஸன்னபு அப்துர்ரஸ்ஸாக் பக்கம்577 பாகம்3.

எனவே மேற்கூறிய ஹதீதுகளை ஒன்று சேர்த்து பெண்கள் நபி ஸல்லல்லாஹு" அலை ஹிவஸல்லமினதும்,ஏனைய நபிமார்கள், வலிமார்கள், ஸாலிஹீன்களினதும் கப்றுகளை ஸியாரத்து செய்யலாம். ஆனால் மற்றையோரின் கப்றுகளை ஸியாத்து செய்வது கூடாது எனக்கூறியுள்ளனர்.





நபி ஸல்லல்லாஹு" அலைஹிவஸல்லமவர்களின் கப்றை ஸியாரத்து செய்வது ஆண்களுக்கும், பெண்களுக்கும் வலுப்பமான வணக்கம் அவ்வாறே ஏனைய நபிமார்கள் இறைநேசர்களின் கப்றுகளை ஸியாரத்து செய்வது என்பதாக இப்னு ஷிஹாப்புத்தீன் ரமலி கூறியுள்ளார்கள். அது போலவே இப்னு ருப்அ, கமூலி போன்றோரும் கூறியுள்ளனர். அதுதான் ஊண்டுதல் பிடிக்கப்பட்ட சொல்லாகும் என நிஹாயத்துல் முஹ்தாஜ் பக்கம் 37 - பாகம் 3ல் பதிவாகியுள்ளது.

அன்புச் சகோதரர்களே! இன்று ஸாலிஹீன்களின் கப்றிஸ்தான்களில் பலதரப்பட்ட அனாச்சாரங்களும், ஷரீஅத்திற்கு முரணானவைகளான தோப்புக்கரணம் போடுதல்; ஆண்கள், பெண்கள் இரண்டரக்கலத்தல் போன்ற கருமங்கள் நடப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அவைகளைத் தடுப்பது உலமாக்கள், அதிகாரிகள், முஸ்லிம் தலைவர்கள் போன்றோர் மீது கட்டாயக் கடமையாகும். இவைகள் நடப்பதால் ஸியாரத்தை முற்றாகத் தடுப்பதற்கு முன்வரக்கூடாது.

இக்காலத்தில் பர்லான அமல்களான தவாபு செய்தல், தொங்கோட்டம் ஓடுதல், மினாவில் தரித்தல், கல்லெறிதல் போன்றவைகளில் தவறுகள் நடப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அதற்காக வேண்டி அந்நல்லமல்களை தடுப்பது மடமையாகும். அதைத்தவிர்த்து தவறுகளைத் திருத்தி அக்கருமங்களைச் செய்ய வைப்பதே அறிவுடமையாகும்.

எனவே, ஸாலிஹீன்களின் கப்றுகளிலோ, ஏனைய கப்றுகளிலோ அனாச்சாரங்களைச் செய்யாமலும், ஷரீஅத்திற்கு முரணான கருமங்களைச் செய்யாமலும் இருப்பதற்கு அல்லாஹ் நம்மனைவருக்கும் நல்லறிவைத் தந்தருள்வானாகவும்.

சகோதரர்களே! ஸியாரத்து செய்வதைப்பற்றிய குர்ஆன் வசனங்களின் ஆதாரங்களையும், நபிமொழிகளையும், மற்றும்

இமாம்களின் கருத்துக்களையும் ஓரளவு எடுத்துக் கூறியுள்ளோம். இனி ஸியாரத்து செய்வது மறுமையை ஞாபகப்படுத்துவதற்கும், உலகிலே துறவியாக வாழச்செய்வதற்கும் மட்டும் தானா என்பதைப் பார்ப்போம். இன்று சிலர் கப்றுகளை ஸியாரத்து செய்வது மரணத்தை ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும், துறவியாக வாழ்வதற்கு மட்டும்தான் எனக் கூறுகின்றனர். அக்கப்றாளிகளுக்காக ஓதப்படும் ஓதல்கள் அவர்களுக்குப் போய்ச்சேர மாட்டாது எனவும் கூறப்படுகின்றன. இவை முற்றிலும் பிழையான கூற்றுகளாகும்.

காரணம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கப்றாளிகளுக்காகப் பிரார்த்தனை புரிந்துள்ளார்கள் என்ற கருத்துக்கள் முன்னால் கூறப்பட்டிருக்கின்றன.

மேலும் "உங்களில் மரணித்தவர்களுக்காக சூரா யாஸீனை ஓதுங்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அபூதாவூத், இப்னுமாஜா.

இந்நபிமொழி நிச்சயமாக மையித்து, அதற்காக குர்ஆன் ஓதுவதுகொண்டு பிரயோசனம் அடைகிறது என்பதைத் தெளிவு படுத்துகிறது என்பதாக உம்ததுல் காரி பக்கம்206 பாகம் 4லிலும், ஜாமிவுஸ்ஸகீர் பக்கம் 25 பாகம் 1லிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்சாரிகள் அவர்களில் யாராவது மரணித்து அடக்கம் செய்யப்பட்டபின்னர் அன்னாரின் கப்றுக்குப் போய் குர்ஆனை ஓதுவார்கள் என இமாமுனா ஷாபிஇய்யி ரலியல்லாஹு அன்ஹு கூறுவதாக கிதாபுர்ரூஹ் பக்கம்14ல் பதிவாகியுள்ளது.

இமாம் நவவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கப்றிடத்தில் குர்ஆனில் சிலதை ஓதுவது முஸ்தஹப்பு. குர்ஆன் பூராவையும்





ஓதுவார்களேயானால் மிகவும் சிறப்புடையதாக இருக்கும் என ஷரஹுல் முஹத்தப் பக்கம்29 பாகம்5ல் குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் ஜலாலுத்தீன் சுயூதி ரஹ்மதுல்லாஹி அலைஹியவர்கள் மையித்திற்காக குர்ஆனை ஓதி அதன் ஸவாபை சேர்த்து வைத்தால் அது போய்ச்சேருமா சேராதா வென அதிகம் ஆராய்ச்சி பண்ணிய பின்னர் முஸ்லிம்கள் எக்காலத்திலும் ஒன்று சேர்ந்து மையித்திற்காக குர்ஆனை ஓதி அதன் ஸவாபைச் சேர்த்து வைத்துள்ளனர். இது தொடராகவே நடந்து வந்துள்ளது. யாரும் அதை நிராகரிக்கவில்லை. இதுவே அதற்குப் போதிய ஆதாரம் என ஸரஹ்ஸுதூர் பக்கம்31 பாகம்1 குறிப்பிட்டுள்ளார்கள்.

எனது தோழர்களே! கப்றுகளிலிருக்கும் உங்களின் தோழர்களை நீங்கள் மறந்து விடாதீர்கள். குறிப்பாக ரமழான் காலத்தில் அவர்களின் ரூஹ்கள் தங்களுடைய வீடுகளுக்கு வந்து அவர்களினின்றும் ஆண்களும், பெண்களும் ஒரு திர்ஹத்தை அல்லது ஒரு உரொட்டியை அல்லது உரொட்டியில் ஒரு துண்டை அல்லது துஆவை அல்லது குர்ஆன் ஓதுவதைக் கொண்டேனும் எங்களுக்கு இரக்கம் காட்டுங்கள். அல்லாஹ் உங்களுக்கு சுவர்க்கலோக ஆடையை அணிவிப்பானென ஆயிரம் விடுத்தம் கூறுகிறார்களென நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ரூஹுல் பயான் பக்கம்:366-பாகம்:4

இவ்வாறே ரபீவுல் அப்ரார் எனும கிரந்தத்திலும் வருகிறது.

அன்புச்சகோதரர்களே! ஈசால் தவாப் (மரணித்தவர்களுக்காக உயிருடன் இருப்பவர்கள் நல்லமல்களைச் சேர்த்து வைப்பது) சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

மரணித்தவர்களுக்காக கேட்கப்படும் துஆ, இஸ்தி.'.பார், குர்ஆன் ஓதுதல், தானதர்மம் செய்தல் ஆகிய அனைத்தும் போய்ச்சேரும்.

இறைவா எனக்கும் என் பெற்றோர்களுக்கும் நான் கட்டிய வீட்டில் மு.'.மின்களாகப் புகுவோருக்கும், மேலும் மு.'.மினான ஆண் பெண்களின் பாவங்களையும் மன்னித்தருள்புரிவாயாக.

அல்குர்ஆன் 69:28.

இறைவா! எங்களுக்கு முன் ஈமான் கொண்டவர்களாக எங்களை முந்திவிட்ட சகோதரர்களின் பாவங்களையும் எங்கள் பாவங்களையும் மன்னித்தருள்வாயாக.

அல்குர்ஆன் 69:10.

அபூ முஹம்மத் சமர்க்கந்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் அறிவிக்கின்றார்கள் யார் மைய வாடிக்கு அருகாமையில் போகும் போது 11 விடுத்தம் குல்ஹுவல்லாஹ் சூராவை ஓதி கப்றாளிக்கு நன்கொடையாகக் கொடுக்கின்றானோ, அக்கப்றாளிகளின் எண்ணிக்கையளவு ஓதியவருக்கும் நற்கூலி கொடுக்கப்படும்

ஷரஹுஸ்ஸுதூர் 130

அபுல்காஸிம் ஸ.'.திப்னு அலியினுஸ்ஸன்ஜானி அவர்கள் தனது கிரந்தத்தில் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கின்றார்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் யார் மையவாடிக்குள் நுழைந்து சூரா அல்ஹம்து, குல்ஹுவல்லாஹு அஹது, அல்ஹாக்கு முத்தகாதுரு ஆகியவைகளை ஓதி யாஅல்லாஹ் உனது கலாமிலிருந்து நான் ஓதியவைகளின் நன்மைகளை இம்மையவாடியில் அடக்கப்பட்டிருப்பவர்களுக்கு சேர்த்திடுவாயாக! என துஆ கேட்டால் அக்கப்றாளிகள் இவர்களுக்கு சிபாரிசுக்காரர்களாக ஆகி விடுவார்கள்.

ஷரஹுஸ்ஸுதூர் 130





ஸாஹிபுல் ஹிலால் அப்துல் அஸீஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கின்றார்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் யார் மையவாடிக்குள் நுழைந்து சூரா யாஸீனை ஓதுகின்றாரோ அக்கப்றாளிகளின் வேதனையை அல்லாஹ் இலேசாக்குவான். அத்துடன் ஓதியவருக்கும் அக்கப்றாளிகளின் எண்ணிக்கையளவு நன்மை கொடுக்கப்படும்.

ஷரஹுஸ்ஸுதூர் 130

அஹ்மதிப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள் நீங்கள் மையவாடிக்குள் நுழைந்தால் ஸூரத்துல் பாத்திஹா, குல்ஹுவல்லாஹு அஹது, குல்அஊது பிரப்பில் பலக், குல்அஊது பிரப்பின்னாஸ் ஆகியவைகளை ஓதி அக்கப்றாளிகளுக்கு சேர்த்து வையுங்கள். அவைகளின் பயன் அவர்களுக்குப் போய்ச் சேரும்.

தபரானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அவ்ஸதிலும், பைஹகி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தனது சுனனிலும் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கின்றார்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் நிச்சயமாக அல்லாஹ் சுவர்க்கத்தில் நல்லடியார்களின் அந்தஸ்தை உயர்த்துவான். அப்போது அந்நல்லடியார்கள் இது எங்கிருந்து எங்களுக்கு வந்ததென்று அல்லாஹ்விடத்தில் கேட்பார்கள். இது உங்களது பிள்ளைகள் உங்களுக்காக பிழை பொறுக்கத் தேடியதன் நன்மை என்பதாக அல்லாஹ் கூறுவான்.

ஷரஹுஸ்ஸுதூர் 130

புஹாரி ரஹ்மதுல்லாஹி அவர்கள் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கின்றார்கள் ஸ.'.திப்னு உபாதா.'. ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே நான் ஊரில் இல்லாத நேரத்தில் எனது தாய் மரணித்து

விட்டார் எனவே அவருக்காக தர்மம் செய்தால் அதன் பலன் அவருக்கு கிடைக்குமா? எனக்கேட்க நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஆம் என பதிலளிக்க யாரஸுலல்லாஹ் எனது இன்ன தோட்டத்தை எனது தாயாருக்காக தர்மம் செய்து விட்டேன் என கூறினார்கள்.

ஷரஹுஸ்ஸுதூர் 128.

ஹிலால் ரஹ்மதுல்லாஹி அவர்கள் இமாம் ஷாபியி ரஹ்மதுல்லாஹி அவர்களைத் தொட்டும் தனது ஜாமி.ஃ. எனும் கிரந்தத்தில் கூறுகின்றார்கள் அன்ஸாரிகள் யாராவது மரணித்தால் அன்னாரின் கப்றுக்குச் சென்று குர்ஆன் ஓதுவார்கள்.

ஷரஹுஸ்ஸுதூர் 130.

மையத்திற்க்காக நீங்கள் தான தர்மம் செய்யுங்கள் அதற்குரிய பலாபலன் அம்மையித்திற்கு சென்றடையும்.

ஜாமிவுஸ்ஸயீர்

மரணித்தவரின் முன்னிலையில் குர்ஆனை ஓதுவது அல்லது மரணித்தவரை ஒரு இடத்தில் வைத்து விட்டு வேறொரு இடத்தில் இருந்து கொண்டு குர்ஆனை ஓதி முடித்தபின் மரணித்தவர்க்காக பிரார்த்திப்பது, அல்லது மரணித்தவரை நாடி குர்ஆனை ஓதி பிரார்த்தனை செய்யாவிட்டாலும் அதற்குரிய நன்மை சென்றடையும்.

தன்வீருள் குலூப் 216.

கப்றின்மேல் நறுமணம் வீசக்கூடிய பூக்களைப் போடுவதும், பசுமையான குச்சிகளைக்குத்துவதும் முஸ்தஹப்பாகும். ஏனெனில் அவைகள் பசுமையாக இருக்கும் காலமெல்லாம் மரணித்தவருக்காக பாவமன்னிப்பு தேடுகின்றன ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பசுமையான ஈத்தங்குச்சிகளை இரு கப்றுகளுக்கு





மேலால் குத்திவிட்டு இவைகள் பசுமையாக இருக்கும் வரை கப்றாளியின் வேதனை குறைக்கப்படுமென கூறியுள்ளார்கள்.
தன்வீருள் குலூப்.

பசுமையான குச்சிகள் செய்கின்ற தஸ்பீஹின் காரணமாக நன்மைகள் மரணித்தவருக்கு போய்ச் சேருகின்ற போது அம்மரணித்தவரின் வேதனை குறைக்கப்படுகின்றன. மேலும் ஒரு மு.ஃ.மினான மனிதன் குர்ஆனை ஓதி அதன் நன்மையை ஒரு மையத்திற்கு சேர்த்து வைத்தால் அந்நன்மையும் மரணித்தவருக்கு போய்ச் சேரும் அதன் மூலம் அம் மையத்தின் வேதனை குறைக்கப்படும் என்பது தெளிவாகின்றது.

மேலும் இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அவர்கள் பசுமையான குச்சிகளின் தஸ்பீஹினால் அடியானுக்கு பயன் உண்டாகும். ஏனனின் பசுமையான குச்சியின் தஸ்பீஹை விட ஒரு மு.ஃ.மினின் கிராஅத் உயர்வும் பயனுமுடையது என குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் இமாம் நவவீ ரஹ்மதுல்லாஹி அவர்கள் ஷரஹ் முஹத்தபில் கப்றுகளை ஸியாரத் செய்வோர் குர்ஆனிலிருந்து சில சூராக்களை ஓதி மௌத்தானவர்களுக்கு ஹதியாச் செய்து துஆ செய்ய வேண்டும் இவ்வாறு இமாம் ஷாபிஇ ரஹ்மதுல்லாஹி அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள். மேலும் அவர்கள் கப்றுக்கருகிலிருந்து கொண்டு குர்ஆனை ஓதி முடிப்பது முஸ்தகப் என விபரிக்கின்றார்கள் இதையே இப்னு கத்தான் ரஹ்மதுல்லாஹி அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

அன்பார்களே! மேற்கோள் காட்டப்பட்ட ஹதீஸ்களும், இமாம்களின் கூற்றுக்களும், மரணித்தவர்களுக்காக உயிருடனுள்ளவர்கள் குர்ஆனை ஓதி, திக்ருகளைக் செய்து, ஸலவாத்துக்களை ஓதி, மற்றும் தானதர்மங்களைச் செய்து அதன் நன்மைகளை அவர்களுக்குச் சேர்த்து வைத்தால் போய்ச்சேரும் என்பதை வழியுறுத்துவதுடன் அவர்களின் வேதனைகளும் குறைக்கப்படுகின்றன என்பது விளங்குகின்றது.

## திக்ரு, ஸலவாத்துக்களுடன் ஜனாஸாவைத் தொடரலாமா?

அன்று தொட்டு இன்று வரையும் திக்ரு, ஸலவாத்துக்களுடன் முஸ்லிம்கள் ஜனாஸாவைத் தொடரும் போது திக்ரு ஸலவாத்துகள் சொல்வதை நாம் அறிவோம். அதையும் இன்று சிலர் ஸஹாபாக்கள் ஜனாஸாவைத் தொடரும் போது மௌனமாகவே சென்றார்கள் என்பதையும், இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அவர்கள் ஜனாஸாவைத் தொடரும் போது அல்லகத்(اللغط) மக்ரூஹ் என்று கூறியதையுமே ஆதாரமாக முன் வைக்கின்றார்கள். மேற்கூறப்பட்ட இரு ஆதாரங்களையும் நன்கு சிந்தனைக்கெடுக்கும் பொழுது ஜனாஸாவைத் தொடரும் பொழுது திக்ரு, ஸலவாத்து ஓதுவது மக்ரூஹ் என்றோ, பித்அத்து என்றோ கூற முடியாது. ஏனெனில் ஸஹாபா பெருமக்கள் கூறுகிறார்கள், நாங்கள் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் தொழுகையில் பேசக்கூடியவர்களாக இருந்தோம். எந்த அளவுக்கெனில் எங்களில் ஒருவர் தனது தேவையைக் கூட தனது சகோதரர் இடத்தில் சொல்லுவார். அக்காலகட்டத்தில் தொழுகை விடயத்தில் பேணுதலாக இருந்து கொள்ளுங்கள். இன்னும் நடுத்தொழுகையிலும் பேணுதலாக இருந்து கொள்ளுங்கள் என்ற இறைவசனம் இறக்கப்படவே தொழுகையில் பேசுவதை விட்டும் தடுக்கப்பட்டோம். மௌனமாக இருக்கும்படி ஏவப்பட்டோம் என்பதாக. இங்கு நாம் கவனிக்கவேண்டியது தொழுகையை நிறைவேற்றக்கூடிய ஒருவன் அத்தொழுகையில் எத்தனையோ பர்லான ஓதல்களையும், சுன்னத்தான ஓதல்களையும் ஓதவேண்டி உள்ளது. எனவே மௌனமாக இருக்கும்படி ஏவப்பட்டோம் என்று கூறப்படும்பொழுது இவைகளும் அதற்குள் உள்ளடங்கி விடுமேயானால் எப்படி தொழுகையை நிறைவேற்ற முடியும்? எனவே மௌனம் என்பது திக்ரு, ஸலவாத்து, குர்ஆன ஓதுதல் போன்ற விடயங்களைத் தவிர உள்ளவைகளையே பேசாமல் இருப்பதற்கு சொல்லப்படும்.

அல்லகத் மக்ரூஹ் ஆக்கப்படும் என்று இமாம் நவவி





ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கும் வார்த்தைக்கு இமாம் கல்யூபி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சப்தத்தை உயர்த்துதல் மக்ரூஹ் என்று சொல்லியிருந்த போதிலும் அக்கருத்து பின்வரும் விளக்கத்தின் பிரகாரம் விளக்கமில்லாத சப்தத்தை உயர்த்துதல் என்பதைக் குறிக்கும்.

இமாம் பத்ருத்தீன் ஐனி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் புகாரி சரீபின் விரிவுரையான உம்ததுல் காரி பக்கம்: 223 பாகம்:6ல் அல்லகத் என்பது தெளிவில்லாத ஒரு வகையான சப்தம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் அல்லாமா கஸ்தலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் புகாரி சரீபின் விரிவுரையான இர்ஷாதுஸ் ஸாரி பக்கம்: 183 பாகம்: 2 ல் மேற்குறிப்பிட்ட விளக்கத்தையே கொடுத்துள்ளார்கள். அதுபோன்றே முல்லா அலீ காரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் மிர்காதுல் மபாதீஹ் பக்கம்:379 பாகம்:3 லும் அவ்வாறே விளக்கம் அளித்துள்ளார்கள்.

மற்றும் இமாம் கராயிதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கிதாபுஸ் ஸீபூர் எனும் கிரந்தத்தில் ஜனாஸாவுடன் செல்லும்போது சூரா பகராவை ஓதுவது அன்ஸாரிகளின் மத்தியில் வழிமுறையாக இருந்தது எனக் கூறுவதாக இமாம் இஸ்மாயில் பர்வஸிரஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்கள் ரூஹுல் பயான் பக்கம்:248 பாகம்:9 ல் குறிப்பிட்டுள்ளார்கள். இது ஜனாஸாவைத் தூக்கிச் செல்லும்போது திக்ரு செய்வதற்கு போதிய ஆதாரமாகும். ஏனெனில் திக்ரும் குர்ஆனில் நின்றும் உண்டானதுதான் எனக் கூறியுள்ளார்கள்.

அன்பர்களே! மேற்கூறப்பட்ட இமாம்களின் கூற்றுக்கள் ஜனாஸாவைத் தொடரும் பொழுது திக்ரு ஸலவாத்துக்களை பிறர்

www.jmhkalmunai.weebly.com



விளங்கக்கூடிய முறையில் தெளிவாக ஓதிக்கொண்டு போகலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது.

அல்லாஹ் நம்மனைவரையும் நேரான பாதையில் வழி நடாத்தி, கஷ்ட துன்பங்களில் இருந்து பாதுகாத்து ஈமானோடு மரணிப்பதற்கு அருள் புரிவானாக. ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

**அல்லாஹு அஃலம் - அல்லாஹ் மிக அறிந்தவன்.**
**எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.**

❖❖❖❖ முற்றும் ❖❖❖❖